# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 121/மா/2025**

**நாள்: 19.08.2025**

| | | |
|---|---|---|
| திரு. P.S. சிவகுரு,<br>சென்னை. | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தாம்பரம் மாநகராட்சி. | --- | எதிர்மனுதாரர் |

சென்னை, தியாகராயநகர், திருமூர்த்தி நகர், திருமலை ரோடு, கதவு எண்.25 என்ற முகவரியில் இயங்கும் M/s.Ourland Engineering Works Pvt.Ltd-ன் இயக்குநர் திரு. P.S.சிவகுரு என்பவரின் 17.03.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.03.2025 அன்று பெறப்பட்டு 121/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை, தியாகராயநகர், திருமூர்த்தி நகர், திருமலை ரோடு, கதவு எண்.25 என்ற முகவரியில் இயங்கும் M/s.Ourland Engineering Works Pvt.Ltd-ன் இயக்குநர் திரு. P.S.சிவகுரு என்பவரின் 17.03.2025 நாளிடப்பட்ட மனுவுடன் பெறப்பட்ட 12.03.2025 நாளிட்ட முறையீட்டு படிவம் 1–ல் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"The Complainant is presently carrying out solid waste management operations in Tambaram City Municipal Corporation (hereinafter referred to as 'the Respondent')

The Complainant was issued Work Order No.2152/2022/E1 dated 23.01.2024 to transfer the solid waste from Kannadapalayam, Madambakkam and Visvesapuram (transfer stations in Tambaram Corporation) to Appur landfill site by the Respondent.

As per the work order, the estimated amount to be paid for the purposes of successful implementation of the work was Rs.37,00,000/- (Rupees Thirty Seven Lakhs Only).

Subsequently, a subject resolution bearing No.83 was also passed by the Respondent on 29.02.2024.

In compliance with the above said work order, the Complainant incorporated a Tipper Truck and deployed additional labour to facilitate the transportation of solid waste from the specified locations to Appur. Upon successful completion of work, the Complainant duly submitted the bills for the services rendered. For the sake of convenience, only copies of the certain weighment receipts along with the corresponding details of the vehicles, the weight collected by each vehicle and the photos are attached. The Complainant submits that they are ready to submit the entire documentary evidence as and when directed by this Hon'ble Authority.

The Complainant submits that the entire documents however, were submitted to the Respondent and invoice was raised for Rs.43,84,944/- (Rupees Forty Three Lakhs Eighty Four Thousand Nine Hundred Forty Four Only) on 01.04.2024 including GST and submitted to the Respondent. The invoice is attached. However, to date, the Complainant has not received payment for the same, which has caused significant concern on our end.

Despite the Complainant's diligent efforts to follow up for the payment by submitting the relevant documentation, the Complainant continues to face delays without any conclusive response from the Respondent. In fact, the Respondent has only given evasive replies such as the work file being lost.

It is disappointing that, despite the Complainant's timely submission of all relevant bills, no concrete action has been taken to release the payment due. This ongoing delay has caused undue financial strain on the Complainant's operations.

Multiple letters addressing this matter have been submitted (Letters dated 08.05.2024, 25.06.2024 & Email correspondences dated 08.05.2024, 14.06.2024) outlining the Complainant's concerns and seeking a resolution, yet no payment has been made till date. The said letters and emails have been attached.

Hence, the present complaint is to release the pending payment of Rs.43,84,944/- (Rupees Forty Three Lakhs Eighty Four Thousand Nine Hundred Fourty Four Only) including the accrued interest @ 12% p.a. from the date of due being 01.04.2024 till the date of payment to the Complainant.". என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 862/2025/எச்1, நாள் 21.07.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட விஸ்வேசபுரம், கன்னடபாளையம் (ம) மாடம்பாக்கம் குப்பை சேகரிக்கும் நிலையங்களிலிருந்து ஆப்பூர் குப்பைக் கிடங்கிற்கு குப்பைகளை ஏற்றி சென்ற வகையில் ரூ.37.00 இலட்சம் வழங்கக் கோரி மனுதாரர் முறைமன்ற நடுவத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு செயல்முறை உத்திரவு ந.க. எண் 2152/2022/இ1 நாள் 23.01.2024–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் பில்பட்டியலில் கோரியுள்ளார். மேற்படி நிறுவனம் மூன்று குப்பை சேகரிப்பு நிலையங்களிலிருந்து ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு ஏற்றி சென்றதால் சம்பந்தப்பட்ட மண்டலங்களிலிருந்து ஆவணங்களை பெற்று, ஒருங்கிணைத்து சரிபார்க்கப்பட்டு, பரிசீலனை செய்து, பில் பட்டியல் வழங்குவது குறித்து முடிவெடுக்க நான்கு வார கால அவகாசம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 22.07.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"கன்னடப்பாளையம் பகுதியில் உள்ள மாடம்பாக்கம் மற்றும் விஸ்வேசபுரம் தாம்பரம் மாநகராட்சியில் உள்ள மூன்று திடகழிவு நிலையங்களிலிருந்து கழிவுகளை ஆப்பூர் எடுத்து செல்ல ரூ.37.00 இலட்சத்திற்கான பணி ஆணை எண்.2152/2022/E1ஐ 23.01.2024 தேதியிட்ட தாம்பரம் மாநகராட்சியால் எனக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட பொருள் தொடர்பாக 29.02.2024 அன்று தாம்பரம் மாநகராட்சி எண்.83ல் தீர்மானம் நிறவேற்றப்பட்டது. மேற்கூறிய பணி உத்தரவின்படி நான் டிப்பர் லாரியை இயக்கி, குறிப்பிட்ட இடங்களிலிருந்து ஆப்பூருக்கு திடக்கழிவுகளை கொண்டு செல்வதற்கு வசதியாக கூடுதல் வாகனங்கள் பயன்படுத்தி பணி வெற்றிகரமாக முடித்து, அதற்கான பில்களை முறையாக சமர்ப்பித்தேன். இன்று வரை அதற்கான பணம் கிடைக்கவில்லை. தாம்பரம் மாநகராட்சியில் எந்த உறுதியான பதிலும் இல்லாமல் தாமதங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். உண்மையில், தாம்பரம் மாநகராட்சியில் என்னுடைய பணிக்கான கோப்பு கிடைக்கப் பெறவில்லை என்ற தகவல் எனக்கு அளிக்கப்பட்டது. இதற்காக என்னால் விரிவான கடிதங்கள் 08.05.2024, மற்றும் 25.06.2024 கடிதங்கள் 08.05.2024 மற்றும் 14.06.2024 மின்னஞ்சலில் அனுப்பப்பட்டன. இன்று வரை பணிக்கான தொகை வழங்கப்படவில்லை.

01.04.2024 முதல் பணம் செலுத்தும் தேதி வரை ஆண்டுக்கு 12% வட்டியுடன் சேர்த்து ரூ.43,84,944/– தொகையை விடுவிக்க இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

6. தாம்பரம் மாநகராட்சி மாநகர நல அலுவலர் மற்றும் மண்டலம் 2ன் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரரின் கோரிக்கை குறித்து செயல் முறை உத்திரவு ந.க.எண்.2152/2022/இ1, நாள் 23.01.2024–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் பில் பட்டியல் கோரியுள்ளார். மேற்படி நிறுவனம் மூன்று குப்பை சேகரிப்பு நிலையங்களிலிருந்து ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு ஏற்றி சென்றதால், சம்மந்தப்பட்ட மண்டலங்களிலிருந்து ஆவணங்களை பெற்று, ஒருங்கிணைத்து சரி பார்க்கப்பட்டு, பரிசீலனை செய்து, பில்

பட்டியல் வழங்குவது குறித்து முடிவெடுக்க நான்கு வார கால அவகாசம் வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.”.

7. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலர் மற்றும் மண்டலம் 2ன் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

கன்னடப்பாளையம் பகுதியில் உள்ள மாடம்பாக்கம் மற்றும் விஸ்வேசபுரம் தாம்பரம் மாநகராட்சியில் உள்ள மூன்று திடகழிவு நிலையங்களிலிருந்து திடக்கழிவுகளை ஆப்பூர் எடுத்து செல்ல ரூ.37.00 இலட்சத்திற்கான பணியினை மனுதாரருக்கு தாம்பரம் மாநகராட்சியால் வழங்கப்பட்டது என்பதும், மேற்கண்ட பொருள் தொடர்பாக 29.02.2024 அன்று தாம்பரம் மாநகராட்சியின் தீர்மானம் எண்.83 நிறைவேற்றப்பட்டது என்பதும், அதன்படி குறிப்பிட்ட இடங்களிலிருந்து ஆப்பூருக்கு திடக்கழிவுகளை டிப்பர் லாரி மற்றும் கூடுதல் வாகனங்கள் மூலம் மேற்கண்ட பணியினை வெற்றிகரமாக முடித்து, அதற்கான பில்களை முறையாக மனுதாரரால் சமர்ப்பித்தும், இன்று வரை அதற்கான பணம் கிடைக்கவில்லை என்பதும், இதற்காக மனுதாரரால் பல கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல் மூலம் கோரியும், மேற்கண்ட பணிக்கான தொகை இன்று வரை வழங்கப்படவில்லை என்பதும், 01.04.2024 முதல் பணம் செலுத்தும் தேதி வரை ஆண்டுக்கு 12% வட்டியுடன் சேர்த்து ரூ.43,84,944/– (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்கு மட்டும்) தொகையை விடுவிக்க கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் மேற்கண்ட கோரிக்கை குறித்து செயல் முறை உத்திரவு ந.க.எண்.2152/2022/இ1, நாள் 23.01.2024–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் பில் பட்டியல் கோரியுள்ளார் என்பதும், மேற்படி நிறுவனம் மூன்று குப்பை சேகரிப்பு நிலையங்களிலிருந்து ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு ஏற்றி சென்றதால், சம்மந்தப்பட்ட மண்டலங்களிலிருந்து ஆவணங்களை பெற்று, ஒருங்கிணைத்து சரி பார்க்கப்பட்டு, பரிசீலனை செய்து, பில் பட்டியல் வழங்குவது குறித்து முடிவெடுக்க நான்கு வார கால அவகாசம் வழங்குமாறு கோரியுள்ளதும் தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலர் மற்றும் மண்டலம் 2–ன் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர், M/s.Ourland Engineering Works Pvt. Ltd, தாம்பரம் மாநகராட்சிக்காக திடகழிவுகளை ஆப்பூர் எடுத்துச் சென்ற வகையில் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை தொடர்பாக சம்பந்தப்பட்ட மண்டலங்களிலிருந்து ஆவணங்களை பெற்று பரிசீலனை செய்து பில் பட்டியல் வழங்குவது குறித்து முடிவெடுக்க நான்கு வார கால அவகாசம் வழங்குமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் மாநகர நல அலுவலர், உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரருக்கு ஒப்பந்தப்பணி செய்ததற்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை விதிகளுக்குட்பட்டு வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள காலக்கெடு மிகாமல் விரைவில் வழங்க உரிய நடவடிக்கை

மேற்கொள்ளவும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்கவும், நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்கவும் தாம்பரம் மாநகராட்சி ஆணையாளருக்கு ஆணையிடலாம் என முடிவு செய்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. P.S. சிவகுரு,
M/s Ourland Engineering Works Pvt. Ltd.,
கதவு எண் 25, Atandra Towers,
திருமலை ரோடு, திருமூர்த்தி நகர்,
தியாகராய நகர்,
சென்னை–600 017.

2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 20/8/25